IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.674/2010
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.30 p.m.

பி.வா.சா. 1 சாட்சி பிச்சைமணி த.பெ.சிவன்காளைத்தேவர்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 09.03.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

1. சர்வே எண் 13/2N என்பது உட்பிரிவாகியுள்ளதா என்றால் உட்பிரிவாகியுள்ளது. சர்வே எண் 13/2N1 என்பது 54 செண்டு என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 13/2N1ல் 54 செண்டுக்குத்தான் வழக்கு என்றால் சரிதான். வாதிகள் தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்கள் பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் சம்மந்தம் இல்லாத ஆவணங்களை தெரிந்து கொண்டேன்.

2. வழக்குச் சொத்துக்கு 1,2 வாதிகள் பெயரில் வருவாய்துறையால் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் வழக்குச் சொத்திற்கும், பட்டாவிற்கும் சம்மந்தம் இல்லை. 1,2 வாதிகள் பெயரில் வழக்குச் சொத்திற்கு பட்டா இருந்தால் அதை நான் ஏற்றுக்கொள்வதற்கு சம்மதமா என்றால் இல்லை. வழக்குச் சொத்திற்கு 1, 2 வாதிகள் பெயரில் ஏற்பட்ட பட்டாவானது தவறானது என்பதற்கு வருவாய்துறையில் நான் மனு கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். முதன்முதலாக 1994ம் வருடம் மனு கொடுத்தேன்.

3. மேற்படி மனுவின் நகல்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்த

மனுவிற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா என்றால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவின் நகலை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வழக்குச் சொத்து ஆதியில் அரசிற்கு பாத்தியப்பட்ட சொத்து என்று எனது எதிர்வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

4. அரசாங்கம் சின்னசிவணான்டி என்பவருக்கு வழக்குச் சொத்தை ஒப்படைப்பு செய்து கொடுத்துள்ளார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஒப்படைப்பு மூலம் சின்னசிவணான்டி என்பவருக்கு கொடுத்ததற்கு ஆவணங்கள் ஏதும் இல்லை என்றால் சரியல்ல. ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும்.

5. நான் சொல்லும் ஆவணத்தை பார்த்தால்தான் நான் சொல்லும் சாட்சியம் சரியா என்பதை தீர்மானிக்க முடியும் என்றால் சரிதான். வழக்குச் சொத்து எந்தக்காலத்திலும் அரசிற்கு பாத்தியப்பட்ட சொத்தும் அல்ல, சின்னசிவணான்டிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட சொத்தும் அல்ல என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தானது 1,2 வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்றால் சரியல்ல.

6. எனது தரப்பில் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.1 ஆவணத்திற்கும், வழக்குச் சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் வழக்குச் சொத்து ஆதியில் அரசாங்கத்தால் ஒப்படைப்பு செய்யப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்படவில்லை என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. பி.வா.சா.ஆ.2 மற்றும் 3 ஒத்தி ஆவணங்கள் வழக்குச் சொத்திற்கு சம்மந்தம் இல்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. சின்னசிவணான்டிக்கு வாரிசுகள் யார் என்றால் ஆண்டிச்சாமி, சிவமாயன் ஆவார்கள். மேற்படி நபர்களுக்கு வாரிசு சான்றிதழ் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி வாரிசு சான்றிதழை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். சின்னசிவணான்டியின் வாரிசுகளான ஆண்டிச்சாமி, சிவமாயன் ஆகியோர் வாரிசு அல்ல என்றால் சரியல்ல.

8. மேற்படி வாரிசு சான்றிதழை பார்வையிட்டால் சின்னசிவணான்டியின் உண்மையான வாரிசு பற்றி தெரியும் என்றால் சரிதான். மேற்படி ஆண்டிச்சாமி, சிவமாயன் பெயரில் பட்டா மாறுதல் ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. பி.வா.சா.ஆ.4 கிரைய ஆவணம் முறையான வாரிசுதாரர்களால் கிரையம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

9. பி.வா.சா.ஆ.4 கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்தவர்களுக்கும் வழக்குச் சொத்திற்கும் எந்தவித உரிமையும் எக்காலத்திலும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தின் அடிப்படையில் வழக்குச் சொத்திற்கு மாயக்காள் பெயரில் பட்டா பெயர் மாற்றம் ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. மேற்படி பட்டாவை எனது தரப்பில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. சர்வே எண் 13/2N என்பது சர்வே எண் 13/2N1 மற்றும் சர்வே எண் 13/2N2 என்று எப்போது பிரிந்தது என்றால் தெரியாது. மாயாக்காள் கிரைய காலத்தில் உட்பிரிவு ஏற்பட்டதா என்றால் ஏற்படவில்லை. மேற்படி மாயக்காள் கிரையத்திற்கு பின்னிட்டு சர்வே எண் 13/2N1 மற்றும் சர்வே எண் 13/2N2 என்று உட்பிரிவாகியுள்ளது. பி.வா.சா.ஆ.6 எனது பெயரில் உள்ள ஆவணம், நான் கிரையம் வாங்கும் காலத்தில் மாயக்காள் பெயரில் உள்ள பட்டாவை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன்.

11. நான் கிரையம் வாங்கும் காலத்தில் வழக்குச் சொத்தின் UDR அ– பதிவேட்டை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். மேற்படி UDR அ– பதிவேட்டில் சர்வே எண் 13/2N யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் தெரியாது. எனது கிரைய காலத்தில் வழக்குச் சொத்திற்கு வாதிகள் வகையறா பெயரில் பட்டா ஏற்பட்டதை அறிந்து அதை மறைத்து கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

12. எனது கிரையப்பத்திரமான பி.வா.சா.ஆ.6ல் வழக்குச் சொத்தின் பட்டா எண் குறிப்பிடப்படாமல் விடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7ல் வழக்கறிஞர் அறிவிப்பில் வழக்குச் சொத்திற்கு கருத்தமாயன் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றும், அது தவறானது என்றும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது கிரையகாலத்தில் வழக்குச் சொத்திற்கு கருத்தமாயன் பெயரில் பட்டா இருந்தது என்றால் சரியல்ல.

13. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு தவறானது என்றால் சரியல்ல. நான் உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியரிடம் தாக்கல் செய்த மனுவின் உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால்

தெரியாது. எனது பெயரில் பட்டா ஏற்பட்டதாக கூறும் வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவு தவறானது என்றால் சரியல்ல. வழக்குச் சொத்திற்கு தற்போதுவரை எனது பெயரில் பட்டா இல்லை என்றால் சரியல்ல, பட்டா உள்ளது. மேற்படி பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். வழக்குச் சொத்திற்கு எனது பெயரில் எவ்வித பட்டாவும் எக்காலத்திலும் ஏற்படவில்லை நான் வழக்கிற்காக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

14. வழக்குச் சொத்திற்கு எவ்வித கிஸ்தி இரசீதுகளும் எனது பெயரில் செலுத்தப்படவில்லை என்றாலும் எந்த சொத்திற்கும் நான் செலுத்தவில்லை என்றாலும் வழக்குச் சொத்திற்கு நான் செலுத்தவில்லை. வழக்குச் சொத்திற்கு பட்டா எண் 1106ல் 7ம்வாதி நாகஜோதி பெயரில் பட்டா உள்ளது என்றால் அதைத்தான் மாற்றிவைத்துள்ளார்கள். மேற்படி 7ம்வாதி பெயரில் ஏற்பட்ட பட்டாவானது கருத்தமாயன், அதிவீரராம பாண்டியன் வகையறாவிடமிருந்து கிரையம் பெற்றதன் அடிப்படையில் பெயர் மாற்றமாகியுள்ளது என்றால் சரிதான்.

15. 7ம்வாதி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் மற்றும் பட்டா பெயர்மாற்றம் ஆகியவை சட்டப்படி செல்லக்கூடியதல்ல என பரிகாரம் கேட்டு தனியாக வழக்கோ அல்லது இவ்வழக்கில் எதிர்கோரிக்கையோ தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். எவ்வித தனியாக வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.10,11 ஆவணத்தின் தீர்ப்புரையை நான் படித்துப் பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன்.

16. மேற்படி வழக்கில் தற்போதைய வழக்கின் 1,2 வாதிகள் பெயரில் ஏற்பட்ட பட்டா குறிப்பிடப்பட்டிருந்தாலும், ஆவணமாக தாக்கல் செய்யாமல்

இருந்தது என்றால் சரிதான். மேற்படி ஆவணமானது இவ்வழக்கு நடவடிக்கையில் கட்டுப்பட்டு இருந்ததால் அதில் ஆவணமாக தாக்கல் செய்யாமல் போயிருந்தது என்றால் சரியல்ல. மேற்படி காரணத்தின் அடிப்படையில்தான் பி.வா.சா.ஆ.10 ஆவணமான தீர்ப்புரையில் மேற்படி அசல்வழக்கு தள்ளுபடி செய்யபட்டது என்றும், எனது உரிமையை ஏற்றுக்கொண்டு மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

17. பி.வா.சா.ஆ.10 தீர்ப்பிற்கு மேல்முறையீடு வாதிகளால் திருமங்கலம் மாண்புமிகு சார்புநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் முடிந்துவிட்டது. மேற்படி மேல்முறையீடு தற்போது வரை நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தை வாதிகள் அனுபவம் செய்துவருவதை ஏற்றுக்கொள்ளாமல் அவர்கள் மீது காவல்நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் சரிதான்.

18. மேற்படி காவல்நிலையத்தில் விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி விசாரணையில் நீதிமன்றத்தில் எனது பரிகாரத்தை தேடிக்கொள்ள அறிவுறுத்தினார்கள் என்றால் சரிதான். நான் வழக்குச் சொத்து சம்மந்தமாக தவறான ஆவணங்களின் அடிப்படையில் வாதிகளுக்கு ஆரம்பகாலத்தில் இருந்து இடையூறு ஏற்படுத்தியதால்தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

19. எனது பெயரில் ஏற்பட்டுள்ள கிரையம் முறையானது அல்ல என்றாலும், அது சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றாலும் சரியல்ல. வழக்குச் சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்ற விளம்புகை

பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்றும், அசல் வழக்கு அனுமதிக்கவேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 1.10p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.09 17:34:48 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.